

ம. பால்ராஜ்

Founder | International President

# LORDS TODAY


LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : June 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS




2021- 16796675767



BIBLE 17




KURAN 17




BHAGAVAD GITA 17

LORDS CLUBS INTERNATIONAL
International Social Services
Govt. Reg. No. : 1359 / 2013
+91 9840559673 | +91 9790855633

www.lordsclubs.com



# தலையங்கம்...

நீ கருவரைக்கு செல்லும் போது மட்டும்

யார் கண்களுக்கும் தெரியாத அணுக்களாய் இரு!

நீ கருவறையை விட்டு வெளியில் செல்லும்போது மட்டும்

உனது கண்கள் கலங்கி அழும் குழந்தைகளாய் இரு!

நீ பள்ளிகல்லூரிகளுக்கு செல்லும் போது மட்டும் மாண்புமிகு மாணவர்களாய் இரு!

நீ வேலைக்கு செல்லும்போது மட்டும் தொழிலாளிகளாய் இரு!

நீ பூமியில் அனைத்து நாடுகளிலும் உயிர் வாழும் போது ஒற்றுமையாய் மனிதநேய மிக்க மனிதர்களாய் இரு!

நீ பூமியில் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களாகி பிற உயிரினங்களுக்கு உதவி செய்யும்போது கடவுள்களாய் இரு!

நீ இந்து கோவில்களுக்குள் செல்லும்போது மட்டும் இந்துக்களாய் இரு!

நீ கிருஸ்தவ தேவாலயங்களுக்கு செல்லும்போது மட்டும் கிறிஸ்தவர்களாய் இரு!

நீ இஸ்லாமிய மசூதிக்குகளுக்குள் செல்லும்போது மட்டும் இஸ்லாமியர்களாய் இரு!

நீ இறுதியாய் இறுதிப் பயணம் செல்லும்போது மட்டும் உன்னை சார்ந்தவர்களின் கண்களை கலங்க வைக்கும் அமைதியான பிணமாய் இரு!

நீ பின்னர் புதைக்கப்பட்டால் எலும்புகளாய் இரு!

நீ எரிக்கப்பட்டால் மீண்டும் அணுக்களை போன்று யார் கண்களுக்கும் தெரியாது சாம்பல் துகள்களாய் இரு!

ஆகவே அனைத்து உயிரினங்களும் அணுக்களாக தோன்றி அணுக்களாகவே மறையும் நிரந்தரமற்ற சில காலங்கள் மட்டுமே பூமியில் உயிர் வாழும் தற்காலிக உயிரினங்கள் தான் என்ற உண்மையை இந்த பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் நன்கு உணர வேண்டும்.

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்
PART-17




## தொடக்கநூல் அதிகாரம் 37 திருவிவிலியம்

### யோசேப்பும் அவர் சகோதரரும்

1 கானான் நாட்டில் தம் தந்தை தங்கியிருந்த நிலப்பகுதிகளில் யாக்கோபும் வாழ்ந்து வந்தார்.

2 யாக்கோபின் குடும்ப வரலாறு இதுவே; யோசேப்பு பதினேழு வயது இளைஞனாய் இருந்தபோது, தம் தந்தையின் மறு மனைவியரான பிலகா, சில்பா என்பவர்களுடைய புதல்வர்களான தம் சகோதரரோடு மந்தை மேய்த்துக் கொண்டிருந்தார். அவர் தம் சகோதரர் செய்து வந்த தீச்செயலைப் பற்றித் தம் தந்தைக்குத் தகவல் கொடுத்தார்.

3 இஸ்ரயேல் முதிர்ந்த வயதில் தமக்கு யோசேப்பு பிறந்தமையால் அவரை மற்றெல்லாப் புதல்வரையும் விட அதிகமாக நேசித்து வந்தார். அவருக்கு அழகு வேலைப்பாடுகள் நிறைந்த ஓர் அங்கியைச் செய்து கொடுத்தார்.

4 அவருடைய சகோதரர்கள் தங்கள் தந்தை அவரை எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கிறாரென்று கண்டு அவரை வெறுத்தனர். அவர்களால் அவரோடு பாசத்துடன் பேச இயலவில்லை.


5 யோசேப்பு தாம் கண்ட ஒரு கனவைத் தம் சகோதரருக்குத் தெரிவித்தார். இதனால் அவர்கள் அவரை மேலும் அதிகமாய் வெறுத்தனர்.

6 அவர் அவர்களை நோக்கி, நான் கண்ட இந்தக் கனவைக் கேளுங்கள்.

7 நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டும் பொழுது திடீரென எனது அரிக்கட்டு எழுந்து நிற்க, உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கின என்றார்.

8 அப்பொழுது அவர் சகோதரர் அவரை நோக்கி, நீ எங்கள் மீது உண்மையிலேயே ஆட்சி செலுத்தப்போகிறாயோ? நீ எங்கள் மீது உண்மையிலேயே அதிகாரம் செலுத்தப் போகிறாயோ? என்று கேட்டனர். இவ்விதக் கனவுகளின் காரணமாகவும் அவருடைய தகவல்களின் காரணமாகவும் அவரை அவர்கள் இன்னும் அதிகமாய் வெறுத்தனர்.

# BIBLE




9 மேலும், அவர் தாம் கண்ட வேறொரு கனவையும் தம் சகோதரர்களுக்கு
விவரித்தார். நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன்; அதில் கதிரவனும் நிலவும்
பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன் என்றார்.

10 இதை அவர் தம் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விவரித்தபோது, அவர்
தந்தை அவரைக் கண்டித்து, நீ கண்ட இந்தக் கனவின் பொருள் என்ன?
நானும் உன் தாயும், உன் சகோதரர்களும் தரைமட்டும் தாழ்ந்து உன்னை
வணங்க வேண்டுமா? என்று கேட்டார்.
11 அதன் பொருட்டும் அவர் சகோதரர் அவர் மீது பொறாமை கொண்டனர். அவர்
தந்தையோ இக்காரியத்தைத் தம் மனத்தில் கொண்டார்.

யோசேப்பு விற்கப்பட்டு எகிப்தை அடைதல்

12 அப்படி இருக்கையில் அவர் சகோதரர் செக்கேமில் தம் தந்தையின்
மந்தைகளை மேய்க்கச் சென்றனர்.

13 இஸ்ரயேல் யோசேப்பை நோக்கி: உன் சகோதரர்கள் செக்கேமில் ஆடு
மேய்க்கிறார்கள் அல்லவா? அவர்களிடம் உன்னை அனுப்பப் போகிறேன்,
என்று கூற, அவர், இதோ நான் தயார் என்றார்.


14 அவர் அவரிடம், நீ போய் உன் சகோதரர், மந்தைகள் நலமா என்று
விசாரித்து வந்து எனக்குத் தெரிவி என்று சொல்லி, எபிரோன்
பள்ளத்தாக்கிலிருந்து அவரை அனுப்பினார். அவரும் செக்கேமிற்கு வந்தார்.

15 அவர் புல்வெளியில் வழி தவறி அலைவதை ஒரு மனிதன் கண்டு, என்ன
தேடுகிறாய்? என்று அவரைக் கேட்டான்.

16 யோசேப்பு, என் சகோதரர்களைக் தேடுகிறேன். அவர்கள் எங்கே ஆடு
மேய்க்கிறார்கள் என்று தெரியுமா? சொல்லும் என்றார்.

17 அதற்கு அம்மனிதன், அவர்கள் இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டார்கள்.
தோத்தானுக்குப் போவோம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டதை நான்
கேட்டேன் என்று பதிலளித்தான். யோசேப்பு தம் சகோதரரைத் தேடிச்
சென்று தோத்தானில் அவர்களைக் கண்டுபிடித்தார்.

# BIBLE




18 தொலையில் அவர் வருவதைக் கண்ட அவர்கள் தங்களுக்கு அருகில் அவர்
வருமுன் அவரைக் கொல்லத் திட்டமிட்டனர்.

19 அவர் சகோதரர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி, இதோ, வருகிறான் கனவின்
மன்னன்!

20 நாம் அவனைக் கொன்று இந்த ஆழ்குழிகளுள் ஒன்றில் தள்ளிவிட்டு, ஒரு
கொடிய விலங்கு அவனைத் தின்று விட்டதென்று சொல்வோம். அப்பொழுது
அவனுடைய கனவுகள் என்ன ஆகும் என்று பார்ப்போம் என்றனர்.

21 ரூபன் இவற்றைக் கேட்டு, அவரை அவர்கள் கையிலிருந்து தப்புவிக்கும்
எண்ணத்தில் அவர்களை நோக்கி, நாம் அவனைச் சாகடிக்க வேண்டாம்
என்றார்.

22 ரூபன் அவர்கள் நோக்கி, அவன் இரத்தத்தை சிந்தாதீர்கள். அவனைக்
பாலை நிலத்திலுள்ள இந்த ஆழ்குழிக்குள் தள்ளவிடுங்கள். அவன் மீது கை
வைக்காதீர்கள் என்று சொன்னார். ஏனெனில் அவர் அவர்கள் கையிலிருந்து
அவரைத் தப்புவித்துத் தம் தந்தையிடம் சேர்ப்பிக்கும் நோக்கம்
கொண்டிருந்தார்.

23 யோசேப்பு தம் சகோதரரிடம் வந்து சேர்ந்தவுடன் அவர் அணிந்திருந்த அழகு
வேலைப்பாடுகள் நிறைந்த அங்கியை உரிந்துவிட்டு,


24 அவரை ஆழ்குழியில் தூக்கிப் போட்டனர். அது தண்ணீரில்லாத வெறும் குழி.

25 பின்பு, அவர்கள் உணவு அருந்தும்படி அமர்ந்தனர். அப்பொழுது அவர்கள்
கண்களை உயர்த்தி, கிலயாதிலிருந்து வந்துகொண்டிருந்த இஸ்மயேலரின்
வணிகக் குழுவைப் பார்த்தனர். நறுமணப் பொருள்களையும், தைல
வகைகளையும் வெள்ளைப் போளத்தையும், அவர்கள் ஒட்டகங்களின் மேல்
ஏற்றி எகிப்திற்குச் சென்று கொண்டிருந்தனர்.

26 அப்பொழுது யூதா தம் சகோதரர்களை நோக்கி, நாம் நம் சகோதரனைக்
கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதனால் நமக்கு என்ன பயன்?

27 வாருங்கள்; இஸ்மயேலருக்கு அவனை விற்றுவிடுவோம். அவன் மேல் நாம்
கைவைக்க வேண்டாம். ஏனெனில், அவன் நம் சகோதரனும் நம் சொந்தச்

# BIBLE




சதையுமாய் இருக்கிறான் என்று சொல்ல, அவர்கள் சம்மதித்தனர்.

28 ஆகையால், மிதியான் நாட்டு வணிகர் அவர்களைக் கடந்து செல்கையில், குழியிலிருந்து யோசேப்பை வெளியே தூக்கி அந்த இஸ்மயேலரிடம் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றனர். அவர்களும் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு சென்றனர்.

29 பின்னர், ரூபன் ஆழ்குழி அருகில் திரும்ப வந்தார். இதோ! யோசேப்பு அங்கே இல்லை. உடனே அவர், தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு,

30 தம் சகோதரரிடம் திரும்பி வந்து, பையனைக் காணோமே! நான் எங்குச் சென்று தேடுவேன் என்றார்.

31 அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்துக் கொண்டனர். ஒரு வெள்ளாட்டுக் கிடாயை அடித்து அதன் இரத்தத்தில் அந்த அங்கியைத் தோய்த்தனர்.

32 அழகு வேலைப்பாடு நிறைந்த அந்த அங்கியைத் தம் தந்தையிடம் எடுத்துச் சென்று, இதை வழியில் கண்டோம். இது உங்கள் மகனது அங்கியா என்று பாருங்கள் என்றனர்.

33 தந்தை அதை அடையாளம் கண்டு, இது என் மகனது அங்கியே! ஏதோ ஒரு கொடிய விலங்கு அவனைத் தின்று விட்டது! ஐயோ, யோசேப்பு ஒரு கொடிய விலங்கால் பீறிக்கிழிக்கப்பட்டுப் போனானே! என்று நினைத்து,


34 தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, இடுப்பில் சாக்கு உடையைக் கட்டிக் கொண்டு பல நாள்களாய்த் தம் மகனுக்காகத் துக்கம் கொண்டாடினர்.

35 அவர் புதல்வர், புதல்வியர் அனைவரும் அவருக்கு ஆறுதல் சொல்ல வந்தனர். அவரோ எந்த ஆறுதலான வார்த்தைக்கும் செவிகொடாமல், நான் துயருற்றுப் பாதாளத்தில் இறங்கி என் மகனிடம் செல்வேன் என்று அவருக்காக அழுது புலம்பினார்.

36 இதற்கிடையில் மிதியானியர் எகிப்தை அடைந்து பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவனும் மெய்க்காப்பாளர் தலைவனுமான போத்திபாரிடம் யோசேப்பை விற்றனர்.

18 தொலையில் அவர் வருவதைக் கண்ட அவர்கள் தங்களுக்கு அருகில் அவர்

# BIBLE




வருமுன் அவரைக் கொல்லத் திட்டமிட்டனர்.

19 அவர் சகோதரர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி, இதோ, வருகிறான் கனவின்
மன்னன்!

20 நாம் அவனைக் கொன்று இந்த ஆழ்குழிகளுள் ஒன்றில் தள்ளிவிட்டு, ஒரு
கொடிய விலங்கு அவனைத் தின்று விட்டதென்று சொல்வோம். அப்பொழுது
அவனுடைய கனவுகள் என்ன ஆகும் என்று பார்ப்போம் என்றனர்.

21 ரூபன் இவற்றைக் கேட்டு, அவரை அவர்கள் கையிலிருந்து தப்புவிக்கும்
எண்ணத்தில் அவர்களை நோக்கி, நாம் அவனைச் சாகடிக்க வேண்டாம்
என்றார்.

22 ரூபன் அவர்கள் நோக்கி, அவன் இரத்தத்தை சிந்தாதீர்கள். அவனைக்
பாலை நிலத்திலுள்ள இந்த ஆழ்குழிக்குள் தள்ளவிடுங்கள். அவன் மீது கை
வைக்காதீர்கள் என்று சொன்னார். ஏனெனில் அவர் அவர்கள் கையிலிருந்து
அவரைத் தப்புவித்துத் தம் தந்தையிடம் சேர்ப்பிக்கும் நோக்கம்
கொண்டிருந்தார்.

23 யோசேப்பு தம் சகோதரரிடம் வந்து சேர்ந்தவுடன் அவர் அணிந்திருந்த அழகு
வேலைப்பாடுகள் நிறைந்த அங்கியை உரிந்துவிட்டு,


24 அவரை ஆழ்குழியில் தூக்கிப் போட்டனர். அது தண்ணீரில்லாத வெறும் குழி.

25 பின்பு, அவர்கள் உணவு அருந்தும்படி அமர்ந்தனர். அப்பொழுது அவர்கள்
கண்களை உயர்த்தி, கிலயாதிலிருந்து வந்துகொண்டிருந்த இஸ்மயேலரின்
வணிகக் குழுவைப் பார்த்தனர். நறுமணப் பொருள்களையும், தைல
வகைகளையும் வெள்ளைப் போளத்தையும், அவர்கள் ஒட்டகங்களின் மேல்
ஏற்றி எகிப்திற்குச் சென்று கொண்டிருந்தனர்.

26 அப்பொழுது யூதா தம் சகோதரர்களை நோக்கி, நாம் நம் சகோதரனைக்
கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதனால் நமக்கு என்ன பயன்?

27 வாருங்கள்; இஸ்மயேலருக்கு அவனை விற்றுவிடுவோம். அவன் மேல் நாம்
கைவைக்க வேண்டாம். ஏனெனில், அவன் நம் சகோதரனும் நம் சொந்தச்

# BIBLE



சதையுமாய் இருக்கிறான் என்று சொல்ல, அவர்கள் சம்மதித்தனர்.

28 ஆகையால், மிதியான் நாட்டு வணிகர் அவர்களைக் கடந்து செல்கையில், குழியிலிருந்து யோசேப்பை வெளியே தூக்கி அந்த இஸ்மயேலரிடம் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றனர். அவர்களும் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு சென்றனர்.

29 பின்னர், ரூபன் ஆழ்குழி அருகில் திரும்ப வந்தார். இதோ! யோசேப்பு அங்கே இல்லை. உடனே அவர், தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு,

30 தம் சகோதரரிடம் திரும்பி வந்து, பையனைக் காணோமே! நான் எங்குச் சென்று தேடுவேன் என்றார்.

31 அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்துக் கொண்டனர். ஒரு வெள்ளாட்டுக் கிடாயை அடித்து அதன் இரத்தத்தில் அந்த அங்கியைத் தோய்த்தனர்.

32 அழகு வேலைப்பாடு நிறைந்த அந்த அங்கியைத் தம் தந்தையிடம் எடுத்துச் சென்று, இதை வழியில் கண்டோம். இது உங்கள் மகனது அங்கியா என்று பாருங்கள் என்றனர்.


33 தந்தை அதை அடையாளம் கண்டு, இது என் மகனது அங்கியே! ஏதோ ஒரு கொடிய விலங்கு அவனைத் தின்று விட்டது! ஐயோ, யோசேப்பு ஒரு கொடிய விலங்கால் பீறிக்கிழிக்கப்பட்டுப் போனானே! என்று நினைத்து,

34 தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, இடுப்பில் சாக்கு உடையைக் கட்டிக் கொண்டு பல நாள்களாய்த் தம் மகனுக்காகத் துக்கம் கொண்டாடினர்.

35 அவர் புதல்வர், புதல்வியர் அனைவரும் அவருக்கு ஆறுதல் சொல்ல வந்தனர். அவரோ எந்த ஆறுதலான வார்த்தைக்கும் செவிகொடாமல், நான் துயருற்றுப் பாதாளத்தில் இறங்கி என் மகனிடம் செல்வேன் என்று அவருக்காக அழுது புலம்பினார்.

36 இதற்கிடையில் மிதியானியர் எகிப்தை அடைந்து பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவனும் மெய்க்காப்பாளர் தலைவனுமான போத்திபாரிடம் யோசேப்பை விற்றனர்.

தொடரும்.....




2:261 اللہ ثُنْبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِىْ كُلِّ سُ
ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ

2:261. அல்லாஹ்வின் பாதையில் தங்கள் செல்வத்தைச் செலவிடுபவர்களுக்கு உவமையாவது: ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றது; அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (இதை மேலும்) இரட்டிப்பாக்குகின்றான்; இன்னும் அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; யாவற்றையும் நன்கறிபவன்.

2:262 وَلَا ۙ لَّهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْۚ وَلَاۤ اَذًى الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ ثُمَّ لَا يُتْبِعُوْنَ مَاۤ اَنْفَقُوْا مَنًّا
خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

2:262. அல்லாஹ்வின் பாதையில் எவர் தங்கள் செல்வத்தைச் செலவிட்ட பின்னர், அதைத் தொடர்ந்து அதைச் சொல்லிக் காண்பிக்காமலும், அல்லது (வேறு விதமாக) நோவினை செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களுக்கு அதற்குரிய நற்கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு; இன்னும் - அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை அவர்கள் துக்கமும் அடையமாட்டார்கள்,

2:263 وَاللّٰهُ غَنِىٌّ حَلِيْمٌيَّتْبَعُهَاۤ اَذًى قَوْلٌ مَّعْرُوْفٌ وَّمَغْفِرَةٌ خَيْرٌ مِّنْ صَدَقَةٍ

2:263. கனிவான இனிய சொற்களும், மன்னித்தலும்; தர்மம் செய்தபின் தொடர்ந்து தொல்லை கொடுப்பதை விட மேலானவையாகும்; தவிர அல்லாஹ் (எவரிடத்தும், எவ்விதத்) தேவையுமில்லாதவன்; மிக்க பொறுமையாளன்.

2:264 نَّاسِ وَلَا يُؤْمِنُ بِاللّٰهِ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ بِالْمَنِّ وَالْاَذٰىۙ كَالَّذِىْ يُنْفِقُ مَالَهٗ رِئَآءَ الـ
لَا يَقْدِرُوْنَ عَلٰى شَىْءٍ مِّمَّا ؕ تَرَكَهٗ صَلْدًا فَمَثَلُهٗ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَاَصَابَهٗ وَابِلٌ فَوَالْيَوْمِ الْاٰخِرِ
وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْكٰفِرِيْنَ كَسَبُوْا

2:264. நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப்போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள்; அ(ப்படிச்

செய்ப)வனுக்கு உவமையாவது: ஒரு வழுக்குப் பாறையாகும்; அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது; அதன் மீது பெருமழை பெய்து (அதிலிருந்த சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது; இவ்வாறே அவர்கள் செய்த -(தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள்; இன்னும், அல்லாஹ் கா∴பிரான மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை.


2:265 وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَ تَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۭ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ
فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

2:265. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவும், தங்கள் ஆத்மாக்களை உறுதியாக்கிக் கொள்ளவும், யார் தங்கள் செல்வங்களைச் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு உவமையாவது: உயரமான (வளமுள்ள) பூமியில் ஒரு தோட்டம் இருக்கிறது; அதன் மேல் பெரு மழை பெய்கிறது; அப்பொழுது அதன் விளைச்சல் இரட்டிப்பாகிறது; இன்னும், அதன் மீது அப்படிப் பெருமழை பெய்யாவிட்டாலும் பொடி மழையே அதற்குப் போதுமானது; அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் பார்க்கின்றவனாக இருக்கின்றான்.

Play CopyWordByWord2:266

2:266 اَيَوَدُّ اَحَدُكُمْ اَنْ تَكُوْنَ لَهٗ جَنَّةٌ مِّنْ نَّخِيْلٍ وَّاَعْنَابٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُۙ لَهٗ فِيْهَا مِنْ كُلِّ الثَّمَرٰتِۙ
وَاَصَابَهُ الْكِبَرُ وَلَهٗ ذُرِّيَّةٌ ضُعَفَآءُ ۖ فَاَصَابَهَآ اِعْصَارٌ فِيْهِ نَارٌ فَاحْتَرَقَتْ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ
تَتَفَكَّرُوْنَ

2:266. உங்களில் யாராவது ஒருவர் இதை விரும்புவாரா? - அதாவது அவரிடம் பேரீச்ச மரங்களும், திராட்சைக் கொடிகளும் கொண்ட ஒரு தோட்டம் இருக்கிறது; அதன் கீழே நீரோடைகள் (ஒலித்து) ஓடுகின்றன; அதில் அவருக்கு எல்லா வகையான கனி வர்க்கங்களும் உள்ளன; (அப்பொழுது) அவருக்கு வயோதிகம் வந்துவிடுகிறது; அவருக்கு (வலுவில்லாத,) பலஹீனமான சிறு குழந்தைகள் தாம் இருக்கின்றன - இந்நிலையில் நெருப்புடன் கூடிய ஒரு சூறாவளிக் காற்று, அ(ந்தத் தோட்டத்)தை எரித்து(ச்



சாம்பலாக்கி) விடுகின்றது. (இதையவர் விரும்புவாரா?) நீங்கள் சிந்தனை செய்யும் பொருட்டு அல்லாஹ் (தன்) அத்தாட்சிகளை உங்களுக்குத் தெளிவாக விளக்குகின்றான்.


2:267 يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَنْفِقُوا مِنْ طَيِّبَاتِ مَا كَسَبْتُمْ وَمِمَّا أَخْرَجْنَا لَكُمْ مِنَ الْأَرْضِ وَلَا تَيَمَّمُوا الْخَبِيثَ
مِنْهُ تُنْفِقُونَ وَلَسْتُمْ بِآخِذِيهِ إِلَّا أَنْ تُغْمِضُوا فِيهِ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ غَنِيٌّ حَمِيدٌ

2:267. நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித் தந்த (தானியங்கள், கனி வகைகள் போன்ற)வற்றிலிருந்தும், நல்லவற்றையே (தான தர்மங்களில்) செலவு செய்யுங்கள்; அன்றியும் கெட்டவற்றைத் தேடி அவற்றிலிருந்து சிலவற்றை (தான தர்மங்களில்) செலவழிக்க நாடாதீர்கள்; ஏனெனில் (அத்தகைய பொருள்களை வேறெவரும் உங்களுக்குக் கொடுத்தால் வெறுப்புடன்), கண் மூடிக் கொண்டேயல்லாது அவற்றை நீங்கள் வாங்க மாட்டீர்கள்! நிச்சயமாக அல்லாஹ் (எவரிடத்தும், எந்தத்) தேவையுமற்றவனாகவும், புகழுக்கெல்லாம் உரியவனுமாகவும் இருக்கின்றான் என்பதை நீங்கள் நன்கறிந்து கொள்ளுங்கள்.

2:268 الشَّيْطَانُ يَعِدُكُمُ الْفَقْرَ وَيَأْمُرُكُمْ بِالْفَحْشَاءِ وَاللَّهُ يَعِدُكُمْ مَغْفِرَةً مِنْهُ وَفَضْلًا وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ

2:268. (தான தர்மங்கள் செய்வதினால்) வறுமை (உண்டாகிவிடும் என்று அதைக்) கொண்டு உங்களை ஷைத்தான் பயமுறுத்துகிறான்; ஒழுக்கமில்லாச் செயல்களைச் செய்யுமாறும் உங்களை ஏவுகிறான்; ஆனால் அல்லாஹ்வோ, (நீங்கள் தான தருமங்கள் செய்தால்) தன்னிடமிருந்து மன்னிப்பும், (அருளும், பொருளும்) மிக்க செல்வமும் (கிடைக்கும் என்று) வாக்களிக்கின்றான்; நிச்சயமாக அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; யாவற்றையும் நன்கறிபவன்.

2:269 يُؤْتِي الْحِكْمَةَ مَنْ يَشَاءُ وَمَنْ يُؤْتَ الْحِكْمَةَ فَقَدْ أُوتِيَ خَيْرًا كَثِيرًا وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ




2:269. தான் நாடியவருக்கு அவன் ஞானத்தைக் கொடுக்கின்றான்; (இத்தகு) ஞானம் எவருக்குக் கொடுக்கப்படுகிறதோ, அவர் கணக்கில்லா நன்மைகள் கொடுக்கப்பட்டவராக நிச்சயமாக ஆகி விடுகிறார்; எனினும் நல்லறிவுடையோர் தவிர வேறு யாரும் இதைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ۗ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ نَّفَقَةٍ اَوْ نَذَرْتُمْ مِّنْ نَّذْرٍ فَاِنَّ اللّٰهَ يَعْلَمُهٗ وَمَآ اَنْفَقْتُمْ مِّنْ 2:270


2:270. இன்னும், செலவு வகையிலிருந்து நீங்கள் என்ன செலவு செய்தாலும், அல்லது நேர்ச்சைகளில் எந்த நேர்ச்சை செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதனை நன்கறிவான்; அன்றியும் அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இலர்.

ؕ وَيُكَفِّرُ عَنْكُمْ مِّنْ سَيِّاٰتِكُمْ وَاِنْ تُخْفُوْهَا وَ تُؤْتُوْهَا الْفُقَرَآءَ فَهُوَ خَيْرٌ لَّكُمْؕ اِنْ تُبْدُوا الصَّدَقٰتِ فَنِعِمَّا هِىَ 2:271
بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ وَاللّٰهُ

2:271. தான தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லதே (ஏனெனில் அவ்வாறு செய்யப் பிறரையும் அது தூண்டும்;) எனினும் அவற்றை மறைத்து ஏழையெளியோர்க்கு அவை கிடைக்கும்படிச் செய்தால் அது உங்களுக்கு இன்னும் நல்லது; அது உங்களுடைய பாவங்களையும் நீக்கும்; நீங்கள் செய்வதை(யெல்லாம்) அல்லாஹ் நன்கறிந்தவனாகவே இருக்கின்றான்.

تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَمَا ؕ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ لَيْسَ عَلَيْكَ هُدٰٮهُمْ وَلٰـكِنَّ اللّٰهَ يَهْدِىْ مَنْ يَّشَآءُ 2:272
وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْـتُمْ لَا تُظْلَمُوْنَ وَجْهِ اللّٰهِ

2:272. (நபியே!) அவர்களை நேர்வழியில் நடத்துவது உம் கடமையல்ல; ஆனால், தான் நாடியவர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகின்றான்; இன்னும், நல்லதில் நீங்கள் எதைச் செலவிடினும், அது உங்களுக்கே நன்மை பயப்பதாகும்; அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியே அல்லாது (வீண் பெருமைக்காகச்) செலவு செய்யாதீர்கள்; நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும்,



அதற்குரிய நற்பலன் உங்களுக்குப் பூரணமாகத் திருப்பிக் கொடுக்கப்படும்; நீங்கள் அநியாயம் செய்யப் -படமாட்டீர்கள்.

2:273 لِلْفُقَرَآءِ الَّذِيْنَ اُحْصِرُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ لَا يَسْتَطِيْعُوْنَ ضَرْبًا فِى الْاَرْضِ يَحْسَبُهُمُ الْجَاهِلُ اَغْنِيَآءَ مِنَ
التَّعَفُّفِ تَعْرِفُهُمْ بِسِيْمٰهُمْ لَا يَسْــَٔلُوْنَ النَّاسَ اِلْحَــافًا وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ


2:273. பூமியில் நடமாடித்(தம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற) எதுவும் செய்ய முடியாத அளவுக்கு அல்லாஹ்வின் பாதையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்குத் தான் (உங்களுடைய தான தர்மங்கள்) உரியவையாகும். (பிறரிடம் யாசிக்காத) அவர்களுடைய பேணுதலைக் கண்டு, அறியாதவன் அவர்களைச் செல்வந்தர்கள் என்று எண்ணிக் கொள்கிறான்; அவர்களுடைய அடையாளங்களால் அவர்களை நீர் அறிந்து கொள்ளலாம்; அவர்கள் மனிதர்களிடம் வருந்தி எதையும் கேட்கமாட்டார்கள்; (இத்தகையோருக்காக) நல்லதினின்று நீங்கள் எதைச் செலவு செய்தாலும், அதை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான்.

2:274 اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُوْنَ

2:274. யார் தங்கள் பொருள்களை, (தான தர்மங்களில்) இரவிலும், பகலிலும்; இரகசியமாகவும், பகிரங்கமாகவும் செலவு செய்கிறார்களோ, அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடத்தில் நற்கூலி இருக்கிறது; அவர்களுக்கு அச்சமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

2:275 اَلَّذِيْنَ يَاْكُلُوْنَ الرِّبٰوا لَا يَقُوْمُوْنَ اِلَّا كَمَا يَقُوْمُ الَّذِىْ يَتَخَبَّطُهُ الشَّيْطٰنُ مِنَ الْمَسِّ ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْۤا اِنَّمَا
الْبَيْعُ مِثْلُ الرِّبٰوا ۘ وَاَحَلَّ اللّٰهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبٰوا ؕ فَمَنْ جَآءَهٗ مَوْعِظَةٌ مِّنْ رَّبِّهٖ فَانْتَهٰى فَلَهٗ مَا سَلَفَ وَاَمْرُهٗۤ اِلَى اللّٰهِ
وَمَنْ عَادَ فَاُولٰٓٮِٕكَ اَصْحٰبُ النَّارِ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

2:275. யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்; இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே" என்று கூறியதினாலேயாம்; அல்லாஹ் வியாபாரத்தை



ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்; ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது - என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது; ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

2:276 وَاللّٰهُ لَا يُحِبُّ كُلَّ كَفَّارٍ اَثِيْمٍ يَمْحَقُ اللّٰهُ الرِّبٰوا وَيُرْبِى الصَّدَقٰتِ

2:276. அல்லாஹ் வட்டியை (அதில் எந்த பரக்கத்தும் இல்லாமல்) அழித்து விடுவான்; இன்னும் தான தர்மங்களை (பரக்கத்துகளைக் கொண்டு) பெருகச் செய்வான்; (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

தொடரும்.....








சமூக சேவகர்
லார்ட்ஸ்
டாக்டர்
மாபால்ராஜ்
தலைவர் & நிறுவனர்




உ.த.மு.க
U.T.M.K

# உலக தமிழர்கள் முன்னேற்ற கழகம்

100% ஊழலற்ற மக்களுக்கான சேவை அரசியல் WWW.LORDSCLUBS.COM









ब्रह्मण्याधाय कर्माणि
सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन
पद्मपत्रमिवाम्भसा ॥ १० ॥

செய்கைகளை யெல்லாம் பிரம்மத்தில் சார்த்தி விட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ, அவன், நீரில் தாமரை யிலைபோல், பாவத்தால் தீண்டல் பெறுவதில்லை. 10

कायेन मनसा बुद्ध्या
केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति
सङ्गं त्यक्त्वात्मशुद्धये ॥ ११ ॥

யோகிகள் பற்றுதலைக் களைந்து, ஆத்ம சுத்தி யின் பொருட்டாக உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும், அன்றி வெறுமே இந்திரியங்களாலும், தொழில் செய்வார். 11

4







**युक्तः कर्मफलं त्यक्त्वा**
**शान्तिमाप्नोति नैष्ठिकीम् ।**
**अयुक्तः कामकारेण**
**फले सक्तो निबध्यते ॥ १२ ॥**

யோகத்தில் பொருந்தியவன் கர்மப் பயனைத் துறந்து நிஷ்டைக் குரிய சாந்தியை அடைகிறான். யோகத்தில் இணங்காதோன் விருப்பத்துக்கு வசமாய்ப் பயனிலே பற்றுதல் கொண்டு தளைப்படுகிறான். 12

**सर्वकर्माणि मनसा**
**संन्यस्यास्ते सुखं वशी ।**
**नवद्वारे पुरे देही**
**नैव कुर्वन्न कारयन् ॥ १३ ॥**

தன்னை வசங்கொண்ட ஆத்மா, எல்லாக் கர்மங்களையும் மனதால் துறந்து, எதனையும் செய்வதுமின்றிச் செய்விப்பதுமின்றி, ஒன்பது வாயில் கொண்ட உடற் கோட்டையில் இன்புற்றிருக்கிறான், 13






न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४ ॥


செய்கைத் தலைமை, செய்கை, செய்கைப்
பயன் பெறுதல்—இவற்றுளெதனையும் கடவுள்
மனிதனுக்குத் தரவில்லை. இயற்கையே இயல்
பெறுகிறது. 14

नादत्ते कस्यचित् पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ १५ ॥

எவனையும் பாவி அல்லது நற் செய்கை
யுடையோனென்று கடவுள் ஏற்பதில்லை. அஞ்
ஞானத்தால் ஞானம் சூழப்பட்டிருக்கிறது. அத
னால் ஜந்துக்கள் மயக்கமெய்துகின்றன. 15

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥ १६ ॥

அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால்
அழித்தவர்களுடைய ஞானம் ஸூர்யனைப்
போன்றதாய்ப் பரம்பொருளை ஒளியுறக் காட்டு
கிறது. 16







तद्बुद्धयस्तदात्मान-
स्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्ति
ज्ञाननिर्धूतकल्मषाः ॥ १७ ॥

பிரம்மத்தில் புத்தியை நாட்டி, அதுவே தா
மாய், அதில் நிஷ்டை யெய்தி, அதில் ஈடுபட்
டோர், தம்முடைய பாவங்களெல்லாம் நன்கு
கழுவப் பெற்றோராய், மீளாப் பதமடைகிறார்
கள். 17

विद्याविनयसम्पन्ने
ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च
पण्डिताः समदर्शिनः ॥ १८ ॥

கல்வியும் விநயமும் நன்கு கற்ற பிராமண
னிடத்திலும், பசுவினிடத்தும், யானையினிடத்
தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலைய
னிடத்தும் பண்டிதர் ஸமப் பார்வை யுடை
யோர். 18







इहैव तैर्जितः सर्गो
येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म
तस्माद् ब्रह्मणि ते स्थिताः ॥ १९ ॥

மனம் ஸம நிலையில் நிற்கப்பெற்றோர் இவ்வுலகத்திலேயே இயற்கையை வென்றோராவர். பிரம்மம் மாசற்றது. ஸம நிலை யுற்றது. ஆதலால் அவர்கள் பிரம்மத்தில் நிலை பெறுகிறார்கள்.

न प्रहृष्येत् प्रियं प्राप्य
नोद्विजेत् प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धिरसम्मूढो
ब्रह्मविद् ब्रह्मणि स्थितः ॥ २० ॥

விரும்பிய பொருளைப் பெறும்போது களி கொள்ளான்; பிரியமற்றதைப் பெறும்போது துயர்ப்படமாட்டான்; பிரம்மஞானி, ஸ்திர புத்தி யுடையோனாய், மயக்கம் நீங்கி, பிரம்மத்தில் நிலை பெறுகிறான்.






बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत् सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षय्यमश्नुते ॥ २१ ॥

புறத் தீண்டுதல்களில் பற்றுதல் கொள்ளாமல் தனக்குள்ளே இன்பத்தைக் காண்போன் பிரம்ம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை எய்துகிறான். 21

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥ २२ ॥

புறத் தீண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத்துக்குக் காரணங்களாம். அவை தொடக்கமும் இறுதியு முடையன. குந்தி மகனே, அறிவுடையோன் அவற்றில் களியுறுவதில்லை. 22

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥२३

சரீரம் நீங்குமுன்னர் இவ்வுலகத்திலேயே விருப்பத்தாலும் சினத்தாலும் விளையும் வேகத்தை எவன் பொறுக்க வல்லானோ அந்த மனிதன் யோகி, அவன் இன்பமுடையோன். 23

தொடரும்.....

# With mangrove conservation, Kenya's coastal communities plant seeds of sustainable 'blue growth'



The southern ocean border of Kenya and Tanzania is dotted with thick hedges of mangroves – indispensable carbon sinks and spectacular ecosystems teeming with life – that appear to float dreamlike over creek beds and mudflats. These hardy trees and shrubs, and the communities that depend on them, are getting a major boost from UN-backed restoration plans that are also helping to reduce poverty and build economic resilience.

Mangroves are tropical marine forests with huge potential. They protect coastlines from erosion and storm surge; and provide food and shelter for a diverse array of wildlife, and nursery habitats for commercially important fish and shellfish.

They also fight climate change: the UN Environment Programme (UNEP) estimates that global mangrove forests sequester within their roots, trunks, and in the soil as much as 22.8 million tons of carbon each year.

While they provide valuable services for people and the planet, mangroves are in trouble. Along with climate change impacts such as rising sea levels and temperatures, mangrove forests are being depleted because their wood is valuable and prized by coastal communities as a prime source of timber for construction, fuel, and even medicines. Rampant coastal urbanization, and unsustainable agriculture and aquaculture practices round out the long list of challenges.

The UN and Kenya join forces

But all hope is not lost! Sometimes, innovative partnerships can lead to sustainable solutions. Over the past three years, UN agencies, the Kenyan Government and other key partners have joined forces to launch several community-based conservation projects. They aim to help tackle poverty and deliver climate, biodiversity and local-level benefits to communities on the Kenyan coast.

Alongside UNEP, the Kenya Forest Service, the Kenya Marine and Fisheries Research Institute and partners recently inaugurated the Vanga Blue Forests Project in coastal Kwale County's Vanga Bay (south of Mombasa), a groundbreaking initiative to trade carbon credits from mangrove conservation and restoration.

Vanga Blue's sister project is in nearby Gazi Bay. Launched two years ago, this first-of-its-kind initiative, known as Mikoko Pamoja ('Mangroves Together'), raises money by selling carbon credits to people and organizations eager to shrink their carbon footprint, through the Scottish charity ACES. This project supports planting and conservation of mangrove trees. The payments for 'mangrove carbon' are used to benefit the local community.

Mwanarusi Mwafrika, the coordinator of Vanga Blue Forests, told UN News that some animal species like dugongs (marine mammals that are cousins of similarly threatened manatees) had begun disappearing. Now, they are coming back. Also, fishermen report of larger catches. This is because of the environment conservation efforts that we employed with the locals."

Blue forests, green growth

The Vanga Blue Forests project focuses on conservation of the trees, as the locals have already planted the seedlings. It benefits about 9,000 residents of



the villages of Vanga, Jimbo and Kiwegu. The villages form 'VAJIKI', a community forest association that oversees 460 hectares of forest land. Jimbo Village has established a nursery with 30,000 viable mangrove seedlings.

Harith Mohamed is the secretary of the community association, and he believes that conservation is the way forward.

"If you disturb the equilibrium [between] mangrove and terrestrial forests then there will be consequences," he told UN News, and explained: "Terrestrial forests are uphill, and the mangroves are down along the water. So, it's important to conserve these forests to prevent flooding because if the sea level rises, then the farms cannot be worked."

The Vanga Blue Forests project supports community sustainable development processes that address education, health, and water and sanitation needs. In the short time since it was launched, some five hectares of mangroves have been restored, and that trajectory is expected to continue.

Moreover, Vanga Blue has set in motion vital projects that will enhance the lives and livelihoods of thousands of people in local fishing communities. For example, a nursery school has been rehabilitated and a hospital has been revamped with new equipment. Local sanitation projects are now under way.

Connecting cities, people and the ocean

Like the ocean, mangroves are massive carbon sinks. Compared to other terrestrial trees and forests, a single mangrove forest has a tenfold ability to suck in carbon emissions. Protecting and enhancing these forests removes and keeps carbon dioxide out of the atmosphere.

They also promote resilience to climate change, according to Florian Lux of the Go Blue Project, a third blue growth initiative underway along Kenya's southern coast, which is being implemented by UNEP and UN-HABITAT and sponsored by the European Union.

"I'm pleased that the Go Blue Project has a mangrove restoration component. [Protection and sustainable use of mangroves provides] lots of possibilities for conserving the environment as well as being beneficial to the local villagers. Carbon sequestration does provide resilience in communities along the oceans," he told UN News.

The Go Blue Project, a joint initiative to advance a sustainable blue economy across all six counties in Kenya's coastal region, focuses on helping cities and towns cope with the impacts of climate change. Among others, the programme aims to harness important coastal and marine resources to bring jobs to over 3,000 youth and women.

Goodluck Mbaga, an environmentalist and conservationist in Kilifi County, reiterated the importance of being mindful of the health of the ocean.

"There's a need to embrace conservation especially of the marine environment. There's a lot of potential within the ocean as an alternative means of sustenance. There is more to reap from the ocean than the terrestrial activities in life," he told UN News, echoing UNEP's plea that rather than depleting or polluting these resources, we must develop ways in which to harness and protect them.



## லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல் சார்பில் சோழிங்கநல்லூர் பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

சோழிங்கநல்லூர்: லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல் சென்னை சோழிங்கநல்லூர் கிளப் கிளை சார்பில் சோழிங்கநல்லூர் பகுதியில் மர கன்றுகள் நடும் நிகழ்வு நடைப்பெற்றது. மேலும் மாதம் முழுவதும் 100 மரக்கன்றுகள் வீதம் நடவேண்டும் என்று முடிவெடுத்து வருடத்தில் இரண்டு மாதங்கள் (ஏப்ரல். மே) தவிர மற்ற அனைத்து மாதங்களிலும் தொடர்ந்து மரக்கன்றுகள் நடுவதற்கு இன்று முதல் மரக்கன்றுகள் நடப்பட்டு துவங்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பபட்டது.

இவ்விழா லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல் தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. மேலும் இதில் சோழிங்கநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ அரவிந்த் ரமேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார்.
லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேனல் சென்னை சோழிங்கநல்லூர் கிளை தலைவர் லார்ட்ஸ் தக்ஷிணாமூர்த்தி மற்றும் சோழிங்கநல்லூர் கிளை லார்ட்ஸ் கிளப் உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

மேலும் இதுபோன்று அனைத்து ஊர்களிலும் உள்ள லார்ட்ஸ் கிளை கிளப்ஸ்களின் உறுப்பினர்கள் அனைவரும் இவ்வழியையே பின்தொடர வேண்டும் என்று பால்ராஜ் அவர்கள் பசுமையான பாரதம் படைப்போம் பொது இடங்களில் மரங்களை விவசாயம் செய்வோம் என்று கேட்டுக்கொண்டார்.

# தமிழ் உலகமொழி




உலகிலேயே தமிழ் மொழி தான் முதல் மொழி. 247 தமிழ் எழுத்துக்களில் இருந்து சுருக்கமாக்கப்பட்டு உருவாக்கப்பட்டதுதான் 26 ஆங்கில எழுத்துக்கள் ஆகும்.

தமிழ் எழுத்துக்களும் ஆங்கில எழுத்துக்களும் கலந்த உருவாக்கப்பட்டது தான் ஹிந்தி எழுத்துக்கள் ஆகும். தமிழ் எழுத்துக்களும் ஹிந்தி எழுத்துக்களும் கலந்து எழுதப்பட்டவை தான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய எழுத்துக்கள் ஆகும்.

இதை நீங்கள் எழுதி பழகி பயின்று பார்த்தால் உங்களுக்கும் தெளிவாக புரியும்.

உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி தமிழ் மொழிதான் தமிழ் மொழி உலகம் தோன்றிய முதல் மனிதன் ஆதாம் ஏவாள் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரையில் அழிக்கப்படாமல் இருப்பதற்கு தாயையும் தாய்மொழியான தமிழையும் பனைமரம் ஏறுதல் குலதொழில்களையும் மறக்காத தமிழர்களாகிய எங்களின் முன்னோர்களும் நாங்களும் தான் முழு காரணம் என்பதனை உலக மனிதர்கள் அனைவரும் அறியவேண்டும்.

மேலும் தமிழ் மொழியை உலக மொழியாக உலக நாடுகள் அறிவிக்க வேண்டும் என்று லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சார்பாக உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அன்புடன்,

**லார்ட்ஸ் ம.பால்ராஜ்**
சர்வதேச தலைவர்
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
Ct. No. : +91 9840559673 | +91 9790855633
Web : www.lordsclubs.com
E-mail : lordsclubsinternational@gmail.com

**ம.பால்ராஜ்**
Founder | International President

